உ

வேலுமயிலுந் துணை.

புதுவை சுலக்ஷணகவி

பராங்குசநாவலர் கீர்த்தனை.

இஃது

சென்னை-சூளை

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923

60

உ

கடவுள் துணை.

பராங்குசநாவலர் கீர்த்தனை.

நம்மாழ்வார் விஷயம்.

1-இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

சடகோபனடி அடியேன்முடி சடகோபனடி

அநுபல்லவி.

உடையநங்கைதவத்தினுல்வந்த சடகோபனடி

சரணங்கள்.

திடமுடமதுரகவிநாதமுனிகட்கு-தடை யில்லாமல் வேதவேதார்த்தந்தனைக்கொடுத்து-இடர்செய்யும் பாசத்தையோட்டி - மடைமையெனுமைக்கனம் வாட்டி குடத்திலுளிருந்தவன் புகழைநாட்டிப்பபடியிற் பராங்குசநாமக்காட்டிய சடகோபனடி

உடையவர் விஷயம்.

2-இந்திரசபா வர்ணமெட்டு.

பல்லவி.

பாஷ்யகாரனின்பாதபங்கயங்களே தாராய்-ஆதி சேஷஹம்ஸகாஷாயம்பரத்தினைதாராய் பாஷ்ய

அநுபல்லவி.

ஆயிரமுகங்காட்டிச்சமணர் ஆவியைவாட்டி-இந்த நாயினேன்றனக்குநல்லவைஷ்ணவங்காட்டி பாஷ்ய

சரணங்கள்.

அரசன்மகள்மீதிருந்த அலகையையோட்டிநல்
லறிவுடையசேதனற்குசரமார்த்தங்காட்டி பாஷய
முகைதனைமொழியவைத்து முந்தியீந்தவா-மிக்க
வாகுடையமங்கைக்கைகந்து வார்த்தைதந்தவாபாஷய
திருவேங்கடார்க்குதிருவாழியையீந்தாய்-அன்னைக
கருவாங்கடல்தனைக்கசெய்யேந்தாய் பாஷய
அசூரிகேசவாரியர்குமார நின்
முசன்பாராங்குசனையாள்தீர்தண்டபவித்தாரா பாஷய

3-மணவாளமாமுனி விஷயம்.

இராகம்-காபி-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஸ்ரீமத்ரம்யஜாமாத்துரு முனிந்தரா வரந்
தந்தருளும் பாதாரவிந்தா ஸ்ரீமத்

அநுபல்லவி.

திருக்குருகூரிலவதரி த்தாய் வைஷ்ணவ
செருக்கையுலகோற்கரியவிதி த்தாய் ஸ்ரீமத்

சரணங்கள்.

துஷ்டகெஜங்கள்போற்றும் துய்யா என்
கஷ்டம்நீக்கியாள்முக்கோல் கையா ஸ்ரீமத்
வடவிருக்ஷசத்துக்கீந்தாய் முத்ததி எந்தன்
மடமையைநீங்களித்தாய் பந்ததி

அரங்க நாதற்களித்தாய் யீட்டை அடியார்
கிரங்கியளிப்பாய்பாய்பர வீட்டை
நருந்துளபமணியும் நேயா மிக்கப்
பெருந்தேவர்கள்பணியும் தூயா ஸ்ரீமத்
சுபகார அனந்தவத் தாரா நின்னை
அபயம்புகுந்தேதனென்னைக் சாரா ஸ்ரீமத்
சராக்ஷரமளித்தவ நேசா புதுவை
பராங்குசதாசன்பணி ஈசா ஸ்ரீமத்

4-தாயார் விஷயம்.

இராகம்-காபி-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஆதிபிரானவசொ ரூபி நின்
பாதந்தன்னையாள்யான் பாவி ஆதி

அநுபல்லவி.

ஓதிமகள்விதியை நீக்கி பாதி
மதியோனத்தியைமுன் போக்கி ஆதி

சரணங்கள்.

நாரணன்றனக்கேநீ பாரி காக்கா
சூரன்றனக்குடப காரி ஆதி
தாசன்பராங்குசனை காரும் பொல்லா
பாசபந்தங்கள்யாவுந் தீரும் ஆதி

5-ஆண்டாள் விஷயம்.

இந்திரசபா வர்ணமெட்டு.

பல்லவி.

கோதைபாதம் போதைசிரஞ்சூடி ஆடுமுன்கோதை

அநுபல்லவி.

பாதகங்களெல்லாம்பரந்தோடுகூடுமுன் கோதை

சரணங்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்திடுந்தல்லி
ஸ்ரீரங்கநாதநாயகிதிருப்பாவைசொல்லி கோதை
பெரியாழ்வார்பெற்றெடுத்த செல்வக்குமாரி
குருவெனுமாமலர் குடிக்கிக்காணிக்கைசூரி கோதை
பராங்குசதாசன் மொழியேற்றிடுஞ்சீலி
சிராவிரஞ்சென்று சதாபக்தனுகூலி கோதை

6-கண்ணன் விஷயம்.

நோட்மெட்

கண்ணனே நீயெண்ணுநற்கதிபெறுவாய் நெஞ்சே
பெண்கள்கயற்கண்களெனும்புண்களென நெஞ்சே
மல்லரைவதைத்துமோட்சமளித்தவன்காண் நெஞ்சே
அல்லினும்பகலினுமவனெங்குமுள்ளோன் நெஞ்சே
கல்லும்நாற்சொல்லினுமவன்காண்பவன்காண் நெஞ்
பத்தவதாரமெடுத்த உத்தமன்காண் நெஞ்சே
பத்திபுரிவோர்க்குமுத்திஈவோன் நெஞ்சே
பராங்குசதாசருடன்பாடுவாயென் நெஞ்சே
பரமபதந்தனைப்பெறுவாய் ண்புடனே நெஞ்சே

நோட்மெட்.

கார்வண்ணனேயிப்போதே கருணைசெய்யென்மீதே கத்
தியநாலத்திக்குமுன்முத்திஈந்தவோ கார்வ

காணுரை-மாமுனி-மாதவ-வேதியர்-சுர-அத்தனே வாநித்தனவோ-சித்தனேயே யேயென்றேத்தினேன் காகா-அத்தனே-வாவாநித்தனே-வோவோசித்தவே யேயென்றேத்தினேன். கார்வண்ணு

ஆண்டருள்நேயா அண்டமுண்டவாயா அண்டினே னின்தொண்டர்கடம் ஆபத்சகாயா-தாண்டவமாடிய ஆண்டவனே தாநாரணவா காரணயேபூரணவோ யெ யென்றேத்தினேன் காகா நாரண வாவா காரணயே யே பூரண யேயென்றேத்தினேன் கார்வண்ணு

நான்முகந்தாதா நினபெற்பாதா நாதா வரந்தா தா யென்மேல் வாதா யான் செய்த தீதா வான்புரி கொண்ட நின்தேன் மலரடியிணை-வா-அய்யனே தா-மெய்யனேவோ-துய்யனேயே யேயென்றேத்தினேன் வாவா-அய்யனே தாதாமெய்யனே-வோவோ-வய்ய னே யேயென்றேத்தினேன் கார்வண்ணு

தேவகிபாலா-தீனதயாளா-தீராய்ரகுவீரா பராங்கு சனைனைக்காராய்-மாபலியிடஞ்சென் றவலுடனேய ளித்த-மாதேவனே பா நாபனே வோ பூபனேயே யேயென்றேத்தினேன் மாமா தேவனே பாபா நாப னே-வோவோபூபனே யேயென்றேத்தினேன் கார்வ

8-இராகம்-புன்னகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

காளிங்கன்மீதாடிய நல்சேவடியைதாதா-கார்வண்ணு யிப்பார்புகழ்த்திடுங் கஞ்சமலர்பாதா-அய்ய-மெய்ய

தஞ்சமென்னையாளாய் காளிங்கன்

ஆவலுடன் சேவடியால் மூவடிமண்கொண்டாய்
அம்புயத்தோன் அரன்முதலோர் அர்ச்சிக்கவந்தாய்
அய்யமெய்ய அருள்தனையீந்தாய் காளிங்கன்

அக்குமணிச்சடையுடைய நக்கனிடர்தொலைத்தாய்
துக்கத்தைநீக்கியேயென்னை அக்கரைசேர்ப்பாய்அய்ய
மெய்ய-பக்கத்தில்வைப்பாய் காளிங்கன்

மாதுதுரோபதைக்குமுன்னல் மானங்கார்த்தமெய்ய
ஆதரிக்காவிடிலெனக்கிங்கா ரனக்கையானய்யமெய்ய
மெய்ய-சங்காழிகையா காளிங்கன்

பாருலகிலுன்னைவிட வேறுதுணையாரோ - வாரணன்
முன்னோடியஸ்திரீ காரணநீரே - அய்ய மெய்ய-பூரண
காரே காளிங்கன்

பார்த்தனுக்காய்தூதுசென்ற பதிதபாவனனே - பார்
புகழ்ஸ்ரீ - பராங்குசற்குதாசனுனேனே அய்யமெய்ய
ஆசையுடனுனே காளிங்கன்

9-இராகம்-காபி-தாளம்-ஏகம்.

பல்லவி.

ராமனைமறவாதே நித்தம் ஸ்ரீராம

அநுபல்லவி.

சேமமடைவாயிது சத்யம் ஸ்ரீராம

சரணங்கள்.

அண்டத்தையுண்டகோ தண்டன் நின்று
தண்டஞ்செய்யார்க்கவர் சண்டன் ஸ்ரீராம
அரியைப்பணிவீர்ஜகத் தீரே நீர்
அகண்டசுகத்தைபெரு வீரோ ஸ்ரீராம
பராங்குசதாசனைக் கார்க்கும் ஸ்ரீராம
பாதகயெமவாதைத் தீர்க்கும் ஸ்ரீராம

10-இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

கெஜராஜபோஜா யாதவராஜா கெஜ

அநுபல்லவி.

போகசயனரவிந்தத்தேசஸ்ரீ கெஜ

சரணங்கள்.

அரனுமயனிந்திரன் ஆராதிகட்கும் பாதா சுரர்முனி வர்களுன்னைக் காணனறியேனேதா - வரதனேவைகுந் ததிதன்-பந்துவேயெனேயாளுமெந்தனை - சராசனைஸ் ரூபனே-பராங்குசதாசன்பணியும் கெஜ

பராங்குசநாவலர் கீர்த்தனை

முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பஜனைக் கீர்த்தனை.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம். பல்லவி.

பேதைநெஞ்சேயிந்த சென்மமெடுத்துநான்
பெற்ற-பலன்போதும் அநுபவித்தசுகம்போதும்.

அநுபல்லவி.

மாதர்மக்கண்மனை மீதிலாசைவைத்த காதலெல்
லாமெங்கேபோச்சே எமதூதர்கையில்சிக்க லாச்சே
கணப் போதிலொடுங்கிப்போச்சே மூச்சேதென்ன
பேச்சே. பேதை

மெத்தபருத்தசடலத்துடன் மலர் மெத்தையின்
மேல்படுத்தாயே நாளைபற்றி யெரியுதேதீயே அந்தச்
சித்திரத்தையறியாயே ஓஓபேயே பேதை

சண்டநமன்வந்து தண்டனைசெய்துன்னைக் கொ
ண்டுபோகவரும்போது அவனைக்கண்டுதடுப்பவரேது
அதிலுண்டோபலனுக்கோது-வெகுசூது. பேதை

தீராப்பிறவிகள்வாராமலே ஸ்ரீமந்நாராயணவெ
ன்றுசொல்லும்-பால்மாறுமலேவந்துநில்லும் அருள்
நேராகவேவந்துபுல்லும் மாய்கைவெல்லும். பேதை

இ-ம்-புன்னாகவராளி-தேடி-சாப்பு-தாளம்-பல்லவி.

பிரந்தும்நஷ்டமாச்சே பூமியிலிருந்து கஷ்டமாச்சே
சிறந்தவேதியர்சூழ் ஸ்ரீபெரும்பூதூரில் வீற்றிருக்கும்
அதிப்தியைத்தினந்துதியாமூடன். பிறந்து

அரிதாசர்களைகண்டுபிரியமுடன் ஆதரிப்பதைவிண்டு மூரியனைப்போலவகை முன்பின் எண்ணுமல்வைதுதி ரியும்பாதகனவன் கருவிலிலழியாமல் பிற

மனைவிதன்னைவிட்டுகாமமெனு மயக்கத்தில் வீ ழ்ந்துகெட்டு - அனைவோரிகழுவேபின் அலைந்தநாய் போற்றிரிந்து - தினமும்பிறர்மாதரை புணர்ச்சிசெய் திருந்ததுரோகி. பிற

அருமறையமரர்சித்தர்முனிவர்கள் துதிக்கவொ ண்ணுதிருவேங்கடமுடையான் திருவடிக்கன்பனுனக ருணைராமாநுசரைக் கருத்தில்நினையாப்பாவி.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்-பல்லவி.

எத்தனைநாளிருந்தாலுங்காயம்
இருப்பதுசதமாயானிருப்பதுசதமா

அத்திமுறையிடளாரஸ்ரீ அரியை யனுதினமுங் கொண்டாடும்-அவர்பாதமே கெதியென்றுதேடும் அ வனையேபாடும். எத்தனை

நீர்மேற்குமிழிபோலவும் வாழ்வை நிச்சயமென் றுநம்பாதே-உயர் அச்சுதனைமறவாதே புவிமீதே.

வேசிகள்மீதினிலாசைமிகவைத்து நாசமடைந்து போகாதே-பாச - பந்தமதிலழுந்தாதே - நீமோசம் போகாதே. எத்த

ஆசையுடன் திருவேங்கடவன்பணியும் ஐயனுக்
கேநாள்தோறும் அதுசெய்யவேநீ மனத்தேதறும்சகல
வழியைக்கோரும். எத்தனை

இ-ம்-புன்னாகவராளி-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

உனைநம்பினேன் சேஷாவதாரா-என்மேல்
மனம்வைத்தாளுவையிப்போஸ்ரீபாஷ்யகாரா உனை

வானவர்பணியும்பூதூரா என்மேல்
மர்மமாகுமோவைஷ்ணவமகத்தோரா உனை

கூரேசர்பணியும்பொற்பாதா-எந்தன்
குறைகேட்டருள்செய் யுனக்குத்தகாதா உனை

தினதயாளா குணதராசேவடி
தினந்துதிக்குமடியார்க் கருளுங்கெம்பீரா உனை

வனசரோறுநிகர் கண்ணுகோதை
மன்முவந்தழைத்திட்டநங்கோயிரண்ணு உனை

திரிகண்டநாதாவாராய் என்றன்
தீராப்பிறவித்துயர் தீர்க்கண்பாராய் உனை

ஏகுபனுல்வர்க்கருள்செய்யே நற்புவியில்
எளியேன்வருந்தென்னிடர்தீர்க்கவொண்ணுநா உனை

தொழிற்செய்யும்கவிதேஜோமயமே-யருளே
வாய்திறந்தூமையைப் பேசச்செய்தளதிராஜா உனை

பரமபதநிவாசகுருவே-தரும்
பவசாகரங்கடந்துன் பதந்தருளே உனை

இ-ம் தேசிகதோடி மீசுரதாளம் பல்லவி.

தாமோதரா நீயேகதி தற்காத்
தருள்கெய்வ்வாய்ததி
காமாதிகளனைத்தும் போக்கிக்காராய் சிலாய்
காரணநாரண தமோதரா

வாசவன்புகழ் காஞ்சிபுரிவாசா வரதராசாபாச
மூரானே திருவேங்கடதாசாபோஷா பாலனேலோல
னேடா தாமோதரா

இ-ம் அசாவேரி ஆதிதாளம் பல்லவி.

இருந்தென்னபோயென்ன-இவ்வுலகத்தில்
இருந்தென்னபோயென்ன

நிரந்தரநமக்கருள் தருமந்தராமமந்திரமதைநினை
வீணில்மறந்திருக்க பாவிகள் இரு

ராகமதையறுத்து ராமனடிவணங்கும்
பாகவதர்பாதங்கள் பணியாதபாவிகள் இரு

தேகமத்திலுலே தெருவெங்குந்திரிந்தும்
யோகிமகளிடமனம்நோகப் பண்ணும்பாவிகள் இரு

செகத்தினிலிருக்குஞ் சர்ச்சனர்களைப்பகைத்து
கொண்டகத்திலழியும் பொல்லாக்கொடியபாவிகள்
பேசாவிடும்புகழைப்பேசி ஸ்ரீபராங்குச
தாசற்களைப்பழிக்குஞ் சண்டாளப்பாவிகள் இரு

இ-ம் கேதாரகௌளம் ஆதிதாளம் பல்லவி.

இந்தமட்டும்விஷயரத்துவையான்
இருந்ததுபோதும் யானிருந்ததுபோதும்

சந்ததமுந்தில்லை தாண்டவராயன் சந்நிதியிற்கூத்
தாடும் பொன்னம்பலமேயென்றுபாடும் அதைத்தே
டும் இந்த

பெண்டுபிள்ளைகள் சோற்றுப்பாளயம்பெருகியு
சந்தைக்கூட்டம் அதிலுனக் கென்னகொண்டாட்டம்
பொம்மலாட்டம். இந்த

அற்பசுகத்தினிற் காசைபட்டுபிரமானந்தத்தை
மரவாதே அம்மைவயிற்றினிற்பிறவாதே இறவாதே

மல்லிகைமுல்லைகள்தாரேனென்று சிலமாதரைக்
கண்டுதொடர்ந்து அவள்பாதங் கதியென்றுகிடந்து
துறவடைந்து இந்த

அத்தியதிபவர்க்காமவிகாரங்கள் அன்னமயமது
தோஷம் அதிலாசைவைத்தால்வெகுமோசம் சம்பவ
நாசம் இந்த

தேசங்கடோறுமலைந்து திரிந்தேடிபுதைத்து வை
த்தாலும் நாளைகூடவரா தொருக்காலம் நிசமொன்று
றுலும் இந்த

ஏடடினிலெழுதத்தொலையுமோ நாம் எடுத்தகறு மசம்சாரம் கரைகாணவோ சுமைபாரம் இதென்ன கோரம் இந்த

அண்ணலெனுங் கோபாலகிருஷ்ணன் தொழும் ஆண்டவன்கோயிலிற் செல்லு தில்லைத்தாண்டவராய னைப்புல்லு மாயைவெல்லு இந்த

இ-ம் பைரவி சாபுதாளம் பல்லவி.

ஓம் ஓம் ஓம் ஓம் பிரணவசொரூபனே.

ஆதாரமாகிய ஐயன்திருவடியை அனுதினமும் வந்துதுதித்துநினையடிமனமே ஓம்

ஆயிரத்தெட்டண்டமோர் குடைக்குள்ளாண்ட சூரனைமறித்து வளைதலும் வேலாலிருபிளவாய்செய்த வுக்கிரனே ஓம்

நாதாந்தநாதருக்கு நாமபிர்மமாகியநாதாந்தவே தாந்தசித்தாந்தசொரூபனே ஓம்

ஞானசொரூபருக்கு ஞானமொழியுரைத்த ஞா னனேபரிபூரணனே நாரணன்றிருமகனே ஓம்

வேதத்தின்முடிவிலும் தேடியுங்காணுதவேலனே நிர்மலனே மெய்ஞ்ஞானதேசிகனே ஓம்

இ-ம் அசாவேரி அடதாளம் பல்லவி.

அருள்புரியாயோ வரதா அருள்புரியாயோ
அஞ்சலெனவோடிவந் தெனையாதரியாயோ. அ

வாய்திறந்தென்னைடொரு வார்த்தைசொல்லாயோ
வஞ்சகமேசெய்தேனென்று மனமிரங்காயோ அ

அன்னையும்நீதந்தையும்நீ குருதெய்வமும்நீயே
ஆபத்துவேளைதனி லாதரிக்கலாகாதோ அ

சங்குசக்ரதரமுகுந்தா தண்டுளபமார்பா
சமயமறிந்துதவிசெய்வாய் சாமளரூபா அ

இரணியனும்மராதீரா எழுமங்கைநாதா இந்த
ஏழைக்கிரங்காதிருந்தா லுல்கமேசாதா அ

விரைசெறியுங்காஞ்சிபுரி வாய்ந்தவரதாதிரு
வேங்கடதாசன்துதி செய்யும்சகதீசா அ

இ-ம் நாதநாமக்கிரியை ஆதிதாளம் பல்லவி.

இன்னமும்மர்மஞ் செய்யலாகுமோ
உமதடிமைக் குழந்தையின்மேல் இ

மன்னர்புகழ்ந்திருவரங்கந் தன்னில்வாழும்
வாசனேயரங்கேசனே இ

வேதமுனிவர்தன் றேவிதனைக்கண்டு வாசவனெ
னுங்கோனுங் காதலுடனரன்மேவ மனங்கொண்டுநீ
தமுடன்சாபமோ தகலிகைநின்ற சிலையதனையன்று
பெண்ணாகச்செய்த இ

மாதவமுனிவர்தேவர் துதிபாலா திருவேங்கட தாசன் ஒதுந்தமிழ்க்கருள் செய்திடுங்குணசீலா வேத முதல்யாவும் துதிசெய்யும்பிரதாபமோதும்பாற்கடல் மேவியநாதா இ

இ-ம் துசாவந்தி ரூபகதாளம் பல்லவி.

கண்டேன்கண்டேன்பால்வெண்ணை
யுண்டோனைக் காலனைவென்ற கண்

அநுபல்லவி.

அண்டத்திற்றேவர்கள் தொண்டர்களாகிய
நின்றுபசனைசெய்யும் புண்டரீகநாதனை கண்

சரணங்கள்.

பூமியில்பத்தர்கள் சரபத்தைத்தீர்க்காதமாமனை
வதைசெய்ததாமோதரனைக் கண்

எதுகுலத்தோர்களுக் குதவாபாவிகள்
மதங்களைத்தொலைத்த வென்பத்மநாபனைக் கண்

ஈசன்பரமபக்தவாசன் ரங்கதாசருக்கு
நேசருக்மணிமனோலையனைநேராகக் கண்

கீர்த்தனைகள் முற்றிற்று.